**வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 02 ஆம் பந்தியின் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் பின்பற்றப்பட்டதாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் மீளாய்வாண்டில் மர விற்பனையிலிருந்து கிடைத்த ரூபா 1,127,473 வருமானம் கணக்கீடு செய்யப்படாமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வருமானம் மற்றும் பெறவேண்டிய வருமானம் ரூபா 1,127,473 வீதம் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்தத் தவறு 2024 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது ஒப்பீட்டு ரீதியான பெறுமதியுடன் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அட்டுறு அடிப்படை பின்பற்றி பெறவேண்டிய வருமானம் சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |
| (ஆ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயப் பெறுமதி முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு தற்போது பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற கிரயம் ரூபா 31,572,314 ஆன 11 மோட்டார் வாகனங்கள், கிரயம் ரூபா 13,476,696 ஆன 03 அலுவலக உபகரணங்கள் மற்றும் கிரயம் ரூபா 1,299,577 ஆன விடயங்களின் எண்ணிக்கை | 2024 ஆம் ஆண்டின் போது உரிய சொத்துக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

குறிப்பிடப்படாத மரண விசாரணை உபகரணங்கள் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் பரிசீலனை செய்கின்ற வாசகர்களுக்கு தெளிவாகும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 92(ஆ) பந்தியின் பிரகாரம் அந்த சொத்துக்களின் மொத்த இழிவுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பூங்காவின் நுழைவுக் கட்டணம், சேவைக் கட்டணம், வாகனங்களை உள்ளடக்கும் கட்டணம், விடுதிகளின் துணிகளை வாடகைக்கு வழங்குதல் மற்றும் யானை உப செவன வசதிகள் போன்றவற்றின் கீழ் வலய அலுவலகத்திலிருந்து கூட்டுமொத்தமாக மீளாய்வாண்டில் பிரதான அலுவலகத்தின் வங்கிக்கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 378,332,174 தொகை வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் காசேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் வங்கி இணக்கக்கூற்றில் இனங்காணப்படாத வைப்பாக மற்றும் பெறவேண்டிய வருமானமாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அந்த வருமான தகவல்கள் பிரதான அலுவலகத்திற்கு கிடைக்காமை மற்றும் இலத்திரனியல் அட்டை மூலம் கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து வைப்பதற்கு சிறிது காலம் எடுக்கின்றமையால் காசேட்டுக்கு எடுக்க முடியவில்லை. எனினும் அந்த வருமானம் அட்டுறு அடிப்படையில் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | பூங்கா மற்றும் பிரதேச அலுவகம் மூலம் சேகரிக்கப்படுகின் ற வருமானங்கள் பிரதான அலுவலகத்திற்கு அறிக்கையிடும் முறைமையொன்றைத் தயாரித்து அந்த வருமாங்களை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கும், நிர்மாணிப்பதற்காகவும் செலவிடப்பட்ட ரூபா 102,205,564 தொகையினை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் | இந்தப் பொருட்கள் தற்போது நிர்மாணிக்கப்பட்ட மின்சார வேலிகளின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காகவே கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்களை நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்படுகினற செலவினம் |

| | | |
|---|---|---|
| செலவீனமாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக அப்பெறுமதியால் மீளாய்வாண்டின் மிகை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் குறைத்தும் அந்த சொத்துக்களுக்குரிய பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்படாமையினால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் பெறுமானத் தேய்வு செலவினம் மற்றும் திரண்ட பெறுமாணத்தேய்வும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | மூலதனமாக்கப்பட ல் வேண்டும். |

**1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| மின்சார வேலி நிர்மாணம் (பூர்த்தியடையாத வேலை) மீதி | 318,959,267 | 21,163,316 | 297,795,951 | மின்சாரவேலி நிர்மாணம் (பூர்த்தியடையாத வேலை) இன் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 297,795,951 தொகைக்கு உரிய பட்டோலைகளும் 2024.06.30 ஆந் திகதிக்கு முன்னர் வழங்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பெறுமதிகளுக்கு நேரொத்த அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட பெறுமதிகளுடன் சமமாக இருத்தல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 1/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| i. | நிதிப்பிரமாணம் 877(1)(இ) | நிதியத்தின் 2023 ஆம் ஆண்டில் பாதீட்டுக்காக பொதுத்திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | பொதுத் திறைசேரியிலிருந்து ஆலோசனை கோரப்பட்ட பின்னர் பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | நிதிப்பிரமாணம் 877(2)(அ) | ஒவ்வொரு நிதியத்திற்காகவும் தனித்தனியாக வங்கிக் கணக்கொன்று பேணிச்செல்லப்பட வேண்டியிருந்த போதிலும் நிதியத்தின் நடவடிக்கைகள் திணைக்கள வங்கிக் கணக்கின் மூலம் பொது வைப்புக் கணக்கூடாக மேற்கொள்ளப்படுகின்றது. | இது தொடர்பாக அரச நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து விசாரணை செய்யப்பட்டுள்ளதுடன் வழங்கப்படுகின்ற ஆலோசனையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,517,770,342 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 248,108,226 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,269,662,116 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன் நுழைவுச்சீட்டு விலைகள் அதிகரித்தமை மற்றும் வருகைதரும் பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பழைய விமானநிலைய சுற்றுலா விடுதி சாதாரண சுற்றுலாப் பிரயாணிகளுக்காக ஒதுக்கப்படாமல் அமைச்சரின் எழுத்து மூல அங்கீகாரத்தின் அடிப்படையில் விசேட நபர்களுக்காக மாத்திரம் ஒதுக்கப்பட்டமையும் கீழ் ஹேணத்தோட்ட சுற்றுலா விடுதி இணையவழி முறைமையின் மூலம் ஒதுக்கப்பட்டமையினால் அவ்வாறு ஒதுக்கப்படாத நாட்களுக்காகவும் ஏனைய சுற்றுலாதாரர்களுக்காக ஒதுக்கியதால் மீளாய்வாண்டின் இறுதிவரையில் பெறக்கூடியதாக இருந்த மொத்த வருமானம் அரசாங்கத்திற்கு | பழைய விமான நிலைய சுற்றுலா விடுதி ஒதுக்கும் வகையில் கிடைக்கின்ற விசாரணை அழைப்புக்கள், அமைச்சரிடம் விசாரணை செய்து ஒதுக்குவதற்கும் கீழ் ஹேணத்தோட்ட சுற்றுலா விடுதி 2024.03.25 ஆந் திகதி முதல் இணையவழி முறைமையின் ஊடாக ஒதுக்குவதற்கும் தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றுலா விடுதிகளை ஒதுக்குதல் நியாயமான அடிப்படையில் பொதுமக்களுக்கு வசதிகளை வழங்குகின்ற முறையில் மேற்கொண்டு வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இழக்கப்பட்டமை பொதுமக்களுக்கு வசதிகளும் இழக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) உடவளவ பிரதேசத்தில் 500 மீற்றர் அமைப்பதற்காக காட்டுயானை நடமாடும் இடையூறு பகுதிகள் 6,000 மற்றும் கிலோமீற்றர் 1,500 நீளமான மின்சார வேலி நிர்மாணிப்பதற்காக தேவையான உபகரணங்கள் ரூபா 87,308,715 தொகையில் 90 நாட்களுக்குள் அரச கம்பனி ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்வதற்காக 2021 மார்ச் 15 ஆந் திகதி அமைச்சரவை தீர்மாணம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கிடைக்கப்பெற்ற ரூபா 13,436,932 பெறுமதியான விடயங்கள் மாத்திரம் கிடைத்திருந்ததுடன் அவற்றின் தரத்தை பரிசோதிக்காமல் கையேற்றமையினால் பொருத்துவதற்கு முடியாதிருந்த களஞ்சியத்தில் காணப்பட்ட களஞ்சியப்படுத்தப்பட்ட இடங்களில் உடைந்து அழிவடைந்திரந்தது. குறித்துரைத்த பிரகாரம் வழங்கல்கள் மேற்கொள்ளப்படாமையினால் 2022 திசெம்பர் 30 ஆந் திகதி ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் வழங்கப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணத் தொகையான ரூபா 8,017,640 தொகை அதற்குரிய முற்பண பிணை முறியிலிருந்தேனும் தீர்த்து வைப்பதற்கு முடியாதிருந்தது. | மேலும் அறவிடுவதற்கு காணப்படுகின்ற ரூபா 8,017,640 தொகையைச் செலுத்துமாறு உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அறவிடுவதற்கு உள்ள தொகையை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.14.1 இற்குரிய மேலதிகம் 35 இன் 6.3.3(ஆ), 2.8.1(இ) மற்றும் 3.12 வழிகாட்டியின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 299 மில்லியன் ஆன 2023 ஆம் ஆண்டிற்கான யானை பட்டாசுகள் கொள்வனவு செய்தல் அமைச்சு | யானை பட்டாசு கொள்வனவு செய்தல் மிகவும் சிக்கலான நடவடிக்கையாக இருந்ததுடன் குறித்துரைத்த மாதிரிகளுக்கிணங்க குறித்துரைத்த திகதியில் பொருட்கள் பெற்றுக்கொள்ள முடியாது | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பெறுகைக் குழு ஊடாக மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் திணைக்கள பெறுகைக்குழு ஊடாக மேற்கொள்ளப்பட்டமை, கேள்வி கிடைத்து 04 நாட்களுக்கு பின்னர் கேள்வி திறக்கப்பட்டமை, விசேட பொருளான யானை பட்டாசு கொள்வனவு செய்யும் போது முழுமையான தகைமைகளை பரீட்சிக்காமல் 05 வருடகாலமாக ஒரே வழங்குனரிமிருந்து மாத்திரம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | போகுமாயின் கணிசமான பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருப்பதுடன் முழமையாக தகைமைகளை பரீட்சிப்பதற்காக 03 மாத அளவிலான காலம் எடுக்கின்றமையால் தேசிய போட்டியாளர் கேள்வி கோருதலின் கீழ் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது. | |

## 4. கணக்களிப்புப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 05 செலவின விடயங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு நிதியேற்பாடு ரூபா 643,715,000 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான செலவினம் ரூபா 815,644,319 ஆனமையால் ரூபா 171,929,319 மதிப்பீட்டை மிஞ்சி அங்கீகாரம் இன்றி செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த மேலதிகம் 26.7 சதவீதம் ஆகும். | மதிப்பீடு செய்யப்பட்ட பாகத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதுடன் செலவினங்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றமையால் இவ்வாறு வேறுபாடு காணப்படுகின்றது. | பாதீட்டு மதிப்பீட்டை விஞ்சாத வகையில் திட்டமிடப்பட்டு செலவினங்களை செய்வதற்கும் தேவையான சந்தர்ப்பங்களின் போது தேவையான பாதீட்டை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக மதிப்பீடு செய்யப்படாத கல்வி மற்றும் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக ரூபா 2,014,077 செலவினமொன்று செய்யப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | பாதீட்டு மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |